செ.வெ.எண்:23/பிப்ரவரி நாள்:13.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை**

**மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் துவக்கி வைத்தார்.**

**-------------**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கில், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள், கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை இன்று (13.02.2016) துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் விளையாட்டுத் துறையினை மேம்படுத்திடும் வகையில் அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பணியாளர்களுக்கான தனி மற்றும் குழு விளையாட்டுப் பேட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள், மீனவ மக்கள் பங்குபெறும் வகையில் கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களின் விளையாட்டுத் திறனை வெளிக் கொணரும் பொருட்டு இவ்வாண்டு முதல், ஆண்டு தோறும் மாநில மற்றும் மாவட்ட அளவில் சுமார் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கம் தனித்தனியாக ஓட்டப்பந்தயம், குண்டு எறிதல், வலை பந்து (Tennikoit), கையுந்து பந்து (Volleyball), கபடி உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளில் அரசு பணியாளர்கள் கலந்து கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியம் மேம்படுவதோடு தங்களது பணிகளில் சிறப்பாக பணியாற்றிட வாய்ப்பாக அமைகின்றது. எதிர்வரும் வருடங்களில் நடத்தப்படும் இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளில் அதிக அளவிலான பணியாளர்கள் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என பேசினார்.

இவ்விழாவில், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திரு.ஆரோக்கிய சுகுமார், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் திரு.மு.சுந்தரபாண்டியன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஜெயஜோதி, இராமநாதபுரம் கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை இயக்குநர் திருமதி.செந்தமிழ்செல்வி, உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பயிற்சியாளர்கள், கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படங்கள் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**